விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | வைகாசி 22 | ரம்ழா 14 | இதழ் 114
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 4-6-1985

## இலங்கைத்தமிழர்கள்தாயகம் திரும்புகின்ற சூழ்நிலை ஏற்படவேண்டும்

### ரஜீவ் – ஜே. ஆர். கூட்டறிக்கையில் இணக்கம்

(கொழும்பு)

''இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பாக மீண்டும் இலங்கை திரும்பும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்'' என்று இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனவும், இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியும் நேற்றுத் தமது சந்திப்பின் இறுதியில் விடுத்துள்ள கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தாவது:-

''இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வு ஏற்படுத்தப்படும்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வன்முறைகளை முற்றிலும் நீக்கும் வகையிலும், இப்பகுதிகளில் சுமுக நிலையை விரைந்து ஏற்படுத்தும் வகையிலும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். இலங்கை இனப்பிரச்னையைத் தீர்ப்பதில் இந்தியாவின் ஒத்துழைப்புத் தொடர்ந்து வழங்கப்படும். எனவும் அந்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்த் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் பேச்சுவார்த்தை, மன்னிப்பு, படைகளும் வாபஸ்!

## புதுடில்லியில் ஜே. ஆர். வாக்குறுதி

(புதுடில்லி)

''தமிழ்த் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கைவிடுவார்களானால் அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும். அத்துடன் அவர்களுக்குப் பொதுமன்னிப்பும் வழங்கப்படும். வடக்கு, கிழக்கில் வன்செயல்கள் நிறுத்தப்படுமிடத்து அப்பகுதிகளிலிருந்து பாதுகாப்புப் படைகளும் வாபஸ் பெறப்படும்'' என்று ஜனாதிபதி ஜே ஆர். ஜயவர்த்தன நேற்றுப் புதுடில்லியில் தெரிவித்தார்.

திரு. ஜயவர்த்தன தமது மூன்றுநாள் இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றுமாலை கொழும்பு திரும்பினார். அவர் புதுடில்லி விமானநிலையத்தில் வைத்து பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. ஜயவர்த்தன தமது பேட்டியில் மேலும் கூறியதாவது!

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண முடியும். இதற்கு இந்தியா தொடர்ந்து உதவும்.

தமிழ்த் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கைவிடுவார்களானல் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் அத்துடன் அவர்களுக்குப் பொது மன்னிப்பும் வழங்கப்படும் வடக்கு கிழக்கில் வன்செயல்கள் நிறுத்தப்படுமிடத்து அப்பகுதிகளிலிருந்து பாதுகாப்புப் படைகளும் வாபஸ் பெறப்படும்''

அரசியல் தீர்வு பற்றிக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு ஜனதிபதி பதிலளிக்கையில் அது பற்றித் தாம் ஏற்கனவே தெரிவித்து விட்டதாகக் குறிப்பிட்டு தேர்தல்கள், மாவட்ட சபைகள் என்பன அவற்றில் அடங்கும் என்றார். மேலும் மாவட்டசபைகள் ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு நாளடைவில் பிராந்திய சபைகளின் ஒருங்கிணைப்புக் குறித்து ஆராயப்படும் என்றார். (கி)

### பேச்சுக்கு உதவ ரஜீவ் விருப்பம்

(புதுடில்லி)

இலங்கை தீவிரவாதத் தலைவர்களுடன் இலங்கை அரசு பேச்சு நடத்த விரும்பினல் அதற்கு தாம் ஒழுங்கு செய்து தருவதாக இந்தியப் பிரதம மந்திரி கூறியதாகத் தெரிகிறது

### இனப் பிரச்னை பற்றி ஜே. ஆருக்கு அமெரிக்க செனட்டர் கடிதம்

(நியூயோர்க்)

இலங்கை இனப் பிரச்னைக்கு ராணுவத் தீர்வைக் கைவிட்டு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என வற்புறுத்தி அமெரிக்க செனட்டரான திரு. கெறி என்பவர் இலங்கை ஜனதிபதி திரு. ஜெயவர்த்தனவுக்குக் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் ராணுவ அட்டூழியங்கள்பற்றி அறிந்து கவலையடைவதாகவும், இலங்கையின் ஒருமைப்பாட்டில் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ள செனட்டர் கெறி அமெரிக்காவழங்கும் பண உதவிகள் தமிழ்ப் பகுதிகளில் பயன்படுத்தப் படுவதில்லையென்று அறிந்து கவலைப்

[6-ம் பக்கம் பார்க்க]

### வவனியா அரசாங்க அதிபர் வேண்டுகோள்

வவனியா மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லோகேஸ்வரன் வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளார்.

(நமது நிருபர்)

வவனியா குருமன்காட்டில் நேற்று முன் தினம் கடத்திச் செல்லப்பட்ட ஜி. ஈ. சோமரத்தினவையும் அவரது குடும்பத்தினரையும் மனிதாபிமானத்தோடு எவ்வித நிபந்தனையும் இன்றி உடன் விடுதலை செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களை வவனியா பொதுமக்கள் சார்பில்

### ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் கடத்தப்பட்டனர்!

#### வவனியாவில் பெரும் பதற்றம்

[வவனியா]

வவனியா குடுமன்காடு கிராமத்தில் நேற்று முன்தினம் ஞாயிறு இரவு 10 மணியளவில் வானில்வந்த இனந்தெரியாதவர்களால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த எட்டுப்பேர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இக் கடத்தல் சம்பவத்தையடுத்து குருமன்காடுக் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிவருகின்றனர்.

இக் கிராமத்தில் நீண்டகாலமாக வாழ்ந்துவந்த தச்சுத் தொழில் செய்பவரான ஜி. ஈ. சோமரத்தினவும் அவரது குடும்பத்தினைச் சேர்ந்த 7 பேரும் நேற்றுமுன் தினம் இரவு வானில்வந்த இனந்தெரியாத நபர்களினுல் கடத்

[6ம் பக்கம் பார்க்க]

### திரும்பிச்செல்ல 70 பேருக்கு உத்தரவு

[லண்டன்]

இங்கிலாந்தில் அடைக்கலம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்கள் 70 பேரை நாட்டைவிட்டு வெளியேறுமாறு இங்கிலாந்து அரசு உத்தரவிட்டுள்ளது.

இந் நடவடிக்கையை இங்கிலாந்திலுள்ள மனித உரிமை சங்கமும், தேவாலயங்களின் இயக்கமும் வன்மையாக ஆட்சேபித்துள்ளன.

### திருமலை ஆஸ்பத்திரியில் 13 சடலங்கள்

(திருகோணமலை)

திருகோணமலை ஆஸ்பத்திரியில் 13 சடலங்கள்வைக்கப்பட்டுள்ளன. இவைகளில் 7 ஆண்கள், 6 பெண்களாம். அடையாளம் காணப்பட்ட ஆறு சடலங்களுக்குரியவர்களின் பெயர்கள் வருமாறு:-

கிண்ணியாவைச் சேர்ந்தவரான டன்குளம் தபாலதிபர் எஸ் தர்மபாலன், உடுப்பிட்டியைச் சேர்ந்தவரான ஒய்வு பெற்ற ஆசிரியை செல்வி பரமேஸ்வரி குமாரசாமி (வயது 51), ஒய்வுபெற்ற விஞ்ஞான

[6-ம் பக்கம் பார்க்க]

### ஜேர்மனியில் இலங்கைத் தேயிலைக்கு எதிர்ப்பிரசாரம்!

(பொன்)

இலங்கைத் தேநீரை அருந்த வேண்டாம் என்று கோரி மேற்கு ஜேர்மனியில் ஸ்ருட்கார்ட் என்ற இடத்தில் சுமார் 200 தமிழ் இளைஞர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர்கள்.

இந்த ஊர்வலத்தின் போது துண்டுப்பிரசுரங்களும் வழங்கினர்கள்.

இத்துண்டுப் பிரசுரத்தில் இலங்கை தேநீரில் டிடிரி கலந்திருப்பதனுல் அது மனித பாவனைக்கு ஏற்றதல்லவென்றும், அதனுல் அதனை அருந்த

[6ம் பக்கம் பார்க்க]

### கடத்தப்பட்ட ஆஸ்பத்திரி மேற்பார்வையாளர் விடுதலை!

(யாழ்ப்பாணம்)

இனந் தெரியாதவர்களினுல் கடத்திச் செல்லப்பட்ட யாழ் அரசினர் ஆஸ்பத்திரி மேற்பார்வையாளர் கே செல்வராசா நேற்று முன்தினமிரவு விடுதலை செய்யப்பட்டார்.

நேற்றுமுன் தினமிரவு 9மணியளவில், கஸ்தூரியார் வீதியிலுள்ள அவரது வீட்டிற்கு சமீபத்தில் உள்ள சந்தியில் அவர் விடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கடத்திச் சென்றவர்கள் அவரை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்ததாக கூறப்படுகிறது.

கடத்திச் செல்லப்பட்ட மேற்பார்வையாளர் செல்வராசா எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட்டதற்கு யாழ் ஆஸ்பத்திரி ஊழியர்கள் நன்றி தெரிவித்தனர். (க)

### பஸ் இன்னும் திரும்பவில்லை

[யாழ்ப்பாணம்]

நேற்று முன்தினம் பருத்தித்துறையிலிருந்து திருகோணமலை சென்றஇ போ. ச. பஸ்களில் ஒன்று நேற்று அங்கிருந்து புறப்பட்டபோதிலும் இதுவரை திரும்பிவந்து சேரவில்லையென அறியப்படுகிறது.

### பஸ் சேவைகள் நேற்றும் தொடர்ந்து பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று நான்காவது தினமாக பஸ்சேவை நடைபெறவில்லை.

பாடசாலை பஸ்சேவை உட்பட சகல உள்ளூர் சேவைகளும், டிசல் இலாததினுல் நடைபெறவில்லை

தூர இடங்களுக்கான சில சேவைகள் மட்டும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பாடசாலை பஸ் சேவைநடைபெருததினுல், மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (க)

### ரான்ஸ்மீட்டர் அபேஸ்

[யாழ்ப்பாணம்]

யாழ். சிறும்பியடி வீதியிலுள்ள புதிய மாநகரசபை

(6ம் பக்கம் பார்க்க)

# அசி விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத் தோட்டப்பாவனைக் கேற்ற யூரியா உரவகைகள்:- மரக்கறி, விசேஷபூக்கள், வாழை, அன்னுசி, தோடை, எலுமிச்சை, மிளகாய், தென்னை, ரோசா, சப்பாத்திப்பூ ஏனையவற்றிற்கும் விற்பனைக்குண்டு M. G. M And Stores, 777, கே. கே. எஸ். வீதி And208 முதலாம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம் போன்:-22611. 3591

கல்வியங்காட்டில் புதுச்செம் மணி ரோட்டில் மூன்று பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு க.கணபதிப்பிள்ளை, 49 இராமநாதன் வீதி நாயன் மார்கட்டு யாழ்ப்பாணம். 3582

## விற்பனைக்கு

Stop பிரேக் ஒயில் விற்பனைக்குண்டு. வர்த்தகர்கள் விசேடசலுகைக்குத் தொடர்பு கொள்ளவும். ட்றேட் சென்ரர், Home Finance Ltd, 155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2862

சீயாக்காய், பச்சை அரிசி, பயறு, வெந்தயம் ஆகிய நான்கு சேர்வையிலுள்ள சீயாக்காய்ப் பவுடர் விற்பனைக்குண்டு. பெக்கட் 5/50 தொடர்பு கொள்க. M.G.M and Stores, 777 காங்கேசன் துறை வீதி and 208 முதலாம், குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி; 22611 [2820]

## ஓராண்டு நினைவஞ்சலி

### திருமதி இராசையா மகேஸ்வரி



தோற்றம்:

11-07-1927

மறைவு:

17-05-1984

திதி:

05-06-1985

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

கணவர், சகோதரர், உறவினர்.

த. சி. இராசையா,
மதராஸ் ஜுவெலரி,
264, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில். (3605)

## சவூதி அரேபியா

## Cleaning Labourers

சவூதி அரேபியாவில் கேம்ப்களில் பணிபுரிவதற்கு

**ஆண் தொழிலாளர்கள்**

(கிளீனிங் லேபரர்ஸ்)

**உடனே தேவைப்படுகின்றார்கள்.**

வயது 21 முதல் 27 வரை

பாஸ்போர்ட் சகிதம் 6 புகைப்படங்களுடன் நேரில் வரவும்.

**கவர்ச்சிகரமான சம்பளம்**

தங்குமிட வசதி — உணவு — மருத்துவச் செலவுகள் இலவசம்.

நேர்முகப் பரீட்சை நடைபெறுவதால்

**உடனே நேரில் வரவும்.**

## HOUSE MAIDS

முஸ்லீம், முஸ்லீம் அல்லாத வீட்டுப் பணிப் பெண்களையும்

(ஹவுஸ் மேட்ஸ்)

**சவூதி – குவைத் – தோஹா**

ஆகிய நாடுகளுக்கு அனுப்புகிறோம்.

பாஸ்போர்ட் — புகைப்படத்துடன் நேரில் வந்து விண்ணப்பிக்கவும்.

## TAJ EMPLOYMEMT AGENCY,

C/o. S. M. அப்துல்கரீம்
(முத்துராஜா),
No. 4, பிள்ளையார் கோவில் லேன்,
முஸ்லிம் காலேஜ் ரோட்,
யாழ்ப்பாணம்

அங்கீகார இல. FE6/FBA/581/4865

(3609) தொழில் அனுமதிப்பத்திர இல: 379

## தேவை

வெட்டித் தைக்கக் கூடிய டெயிலர் தேவை. அனுபவம் அவசியம்: கொழும்பு எக்ஸ் பேட் டெயிலர், தபாற் கந்தோரடி, கரவெட்டி. தங்குமிட வசதி உண்டு. 3610

## வாடகைக்கு

சாவகச்சேரி கச்சாய் ரோட்டில் பலசரக்குக்கடை தளபாடங்களுடன் உடனடியாகவாடகைக்கு கொடுக்கவுண்டு. தொடர்பு அரியராசா இல.4 கயிலாயபிள்ளை வீதி சாவகச்சேரி., இல.1 செட்டித்தெரு ஒழுங்கை நல்லூர் யாழ்ப்பாணம். [3554]

## AVAILABLE

I. C. M. A/I. D. P.
Study pack for all subjects professional Part two. Books suitable for I. D. P. also available-No: 9, DavidRoad, Jaffna. 3614

## இலவச ஆலோசனை

உங்கள் வியாதி இன்னும் தீரவில்லை என்ற கவலையா? இளம்பிள்ளை வாதம், வாதம், மூலம், ஆஸ்மா, வலிகள், கட்டி கழலை, பெரும்பாடு, வெள்ளை, உடல் மெலிவு. ஸ்கலிதம், நீரிழிவு, வயிற்றுப் புண், மலடு எந்த வியாதியானலும் பரம்பரை சித்த ஆயுள்வேதமுறைப்படி ஆலோசனை பெறலாம். நேரிலும் சந்திக்கலாம் விபரங்கட்கு:- Dr. N. எமிலியானூஸ், அன்ரனி டிஸ்பென்சறி, ஆஸ்பத்திரி வீதி, புங்குடுதீவு. 3615

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

சமரபாகுவைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தவனம் கனகசுந்தரம் பெண் தங்கமுத்துவின் மரணசாதனமில்லாச் சொத்துவிடயமாக:

—மரணமெய்தியவர்

கனகசுந்தரம் கனகசபாபதி, சமரபாகு, உடுப்பிட்டி.

—மனுதாரர்

மரணசாதன]
நியாயாதிக்க] 1219/T
வழ இலக்கம்]

மேலே பெயர் கொண்ட மரணச் சொத்து வழக்கில் மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஆடி மாதம் 5ஆம் திகதி காலை 9-30 மணிக்கு இந்நீதிமன்றின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்கு தகுந்தகாரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுன்றீர்.

1985ம் ஆண்டு வைகாசி மாதம் 23ம் திகதி

நீதிமன்றின் கட்டளைப்படி

ச நடராசா,
பதிவாளர்.

வரைவு:
ஆர். ஆர். தர்மரட்ணம்
மனுதாரின் சட்டத்தரணி.
3546

## நவாலி A. D. குணரட்னம்

(ஜேகோவாவின் சாட்சி)

## பிரார்த்தனைக் கூட்டம்

அன்னரின் மறைவை முன்னிட்டு எதிர்வரும் சனிக்கிழமை (08 06 85) காலை 10-00 மணிக்கு தெல்லிப்பழையில்ஒருபிரார்த்தனைக்கூட்டம் நடைபெறும். உற்றார், உறவினர், அனுதாபிகள் யாவரும் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேம்.

எஸ். பி. அழகரட்னம்,
டச் ரோட்,
தெல்லிப்பழை.

[3618]

## 10 வது நினைவஞ்சலி

### ஞானசுந்தரம் ஞானசபாபந்தன்

மறைவு: 26-5-1975



வருடங்கள் சென்றாலும் என்றும் எங்கள் மனத்தில் பசுமை நிறைந்து இருக்கும் உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்கும்:

தாய், சகோதரிகள், மைத்துனர், மருமக்கள்
'செல்வகொட்',
கொக்குவில். 3589

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி மாணிக்கம் யோகேஸ்வரி



தோற்றம்:

11-6-1927

மறைவு:

4-6-1984

திதி:

25-5-1985

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எங்களுக்கு ஊன்றுகோலாயிருந்து வழிநடத்தின எம் அன்புத் தெய்வமே. எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில்கொண்டு ஓராண்டு சென்றாலும் தங்களின் திருஉருவம் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மசாந்திக்கு இறைவனை வேண்டுகிறோம்.

அன்புக் கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், தங்கை.
3611

## மரண அறிவித்தல்

### வ. கந்தையா

கருகம்பனை வாசியும் முன்னள் கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலய சிற்பியும் அதிபருமாகிய உயர்திரு. வ. கந்தையா அவர்கள் 31-5-85 வெள்ளிக்கிழமை மாலை இறைவனடி எய்தினர். அன்னரின் ஈமக் கிரியைகள் 1-6-85 சனிக்கிழமை பிற்பகல் கருகம்பனையில் நடந்தேறியது.

இன்றைய சூழ்நிலைகாரணமாக மரண அறிவித்தலை உரியகாலத்தில் வெளியிட முடியாமையையிட்டு வருந்துகிறோம். உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

(3616) மனைவி – மக்கள்.

### மணிவாக்கு

உறுதியும் அன்பும் நம்மிடம் தோன்றும் பெரிய கவலைச் சுமையை நீக்கும்.

— எமர்சன்

## நமது நோக்கு

# பருப்போல வந்த வினை பாரவினையான கதை

கல்வி குடியேற்றம். தமிழ்மொழி உரிமை, அரசாங்கத்திலும் கூட்டுத்தாபனங்களிலும் தொழில் போன்ற துறைகளில் தமிழ் மக்களின் நீண்ட காலக் குறைகளை நீக்கி விரைவில் நீதி வழங்குவோம்.

இந்த வாக்குறுதியை அளித்து 1977ல் ஆட்சிக்கு வந்த ஐ. தே. கட்சி, 'இக் குறைகள் நிறைவேற்றப் படாததால் தமிழ் மக்கள் ஒரு தனிநாடு கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்'' என்றும் தேர்தல் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தமை இன்றைய அரசியல் வரலாற்றில் நம்பமுடியாத விபரீதம்.

இந்த விஞ்ஞாபனம் வரலாற்று ஆராய்ச்சியாளருக்கு ஒரு வரப்பிரசாதமென்றும் சொல்லலாம்.

இன்று 1985 யூன் மாதத்தில் அண்டை நாடாகிய இந்தியா இலங்கைத் தமிழரின் அழிவுமுற்றாகமுன் தன்னாலியன்ற உதவியையும் ஒத்தாசையையும் வழங்க என்னென்ன ராஜதந்திரத்தை கையாண்டுவந்திருக்கிறது?

அன்று இந்திராகாந்தியும், இன்று ரஜீவ் காநதியும் இலங்கைத் தமிழ் மக்களின் அநாதைநிலைமையை நன்குணர்ந்தபடியால், அடக்கி ஒடுக்கப்படும் இந்த மக்களுக்கு விமோசனம் அளிகக மிக நுணுக்கமான அரசியல் உத்தகளை உபயோகித்துவந்திருக்கின்றனர்.

டில்லி உச்சி மாநாட்டின் விளைவு, ஆழ்கடலில் தத்தளக்கும் அமைதியானபணிதனுக்கு ஒரு துரும்பு போலிருக்குமென்று எங்கும் நிலையில் நாம் வாழ்கின்றோம்.

பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞரில் எத்தனை பேர் பரலோகம் போய்விட்டனர்! இன்று தம் உயிரைப் பணயம்வைத்துப் போராடும்இளைஞர்கூட்டம் போரைக் கைவிட்டு தங்கள் வருங்காலத்துக்கு ஒரு நம்பிக்கை ஒளி காண்பதற்கு வழி கிட்டவேண்டுமெனபதே ஒவ்வொரு தமிழனின் பிரார்த்தனையாகும்.

நாமிந்த இன ரீதியில் நினைக்கவும் எழுதவும் நாட்டில் நடைபெற்ற, நடைபெறும் கொடுமைகள் தூண்டுகின்றன என்பது நாட்டுக்கோ தமிழ் மக்களுக்கோ நல்லதல்ல. ஆனால் கடந்தகால அநீதிகளை ஒழிக்க முற்பட்ட ஆட்சியின் இன்றைய சாதனை எல்லோருக்கும் தெரிவதில்லை.

பலவினம் வாழும் நாட்டில் இனப் பாகுபாட்டுக்கு இடமே இல்லை. சுயநிர்ணயம் ஒவ்வொரு இனத்தின் பிறப்புரிமை என்று 1981 மனித உரிமை சாசனத்தில் கைச்சாத்திட்ட அரசுதன் ஆட்சியில் நடந்தேறியதே 1983 ஆடிக்கலவரம்.

1983 / 84 பல்கலைக்கழக ஆண்டில், கொழும்பில், யாழ்ப்பாணத்தில், காலியில், மாத்தறையில், கண்டியில் 530 மாணவர்கள் பரீட்சை விதிக்கமைய மருத்துவ, விஞ்ஞான, பொறியியல் துறைகளில் அனுமதி பெறுந்தகைமையுற்றனர்.

ஆனால் 'வசதி குறைந்த மாவட்டங்கள்' என்ற அடிப்படையில் உருவான கோட்டாமுறைப்படி வேறு 519 மாணவருக்கு இடமளிப்பதற்காக மேலேகூறப்பட்ட 530 மாணவர்களின் அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த 530 பேரில் 198 யாழ்ப்பாணத்திலும், 224 பேர்கொழும்பிலும் இருந்து பரீட்சைக்கு தோற்றியவர். அனுமதிமறுக்கப்பட்ட தமிழ் மாணவர் தொகை 273. அது 51,6 சதவீம். இது பொறுப்பான அறிக்கை வெளியிடும்புள்ளி விபரம்.

பின்தங்கிய பகுதிகளுக்கு விசேட சலுகை நியாயமானது. கடந்த 12 வருடங்களுக்குமேல் - ஒரு வருடத்தைத் தவிர இவ்வித சலுகை இன்றைய புள்ளி விபரம் விளக்குமளவுக்கு நடந்துவருகிறது.

தகைமையுடைய 530 மாணவருக்கு எதுவிதத்திலும் உயர்கல்வி வசதி வழங்கப்பட்டால் இவ்வித பாகுபாடு இன்று இன ஒதுக்கலாகவும், இன அழிவாகும் நிலையையும் எட்டியிருக்காது.

இது கல்வியின் நிலை என்றால் தொழில், விவசாயம், வியாபாரம் போன்ற பொருளாதாரத்துறை எவ்வாறிருக்கின்றது.

அரசாங்க லிகிதர் சேவை எவ்வாறிருக்கின்றது.

வசதியற்ற தமிழ் மாணவர் திறமை அடிப்படையில் இச்சேவையில் சேர்ந்து உழைப்பாலும் திறமையாலும் உயர்பதவி வகித்து வந்தனர்.

அந்த நிலைமை இருந்தவாறிருக்க வேண்டுமென்று நாம் வாதாடவில்லை. ஆனால் 1977 தொடக்கம் 1981 வரைக்கும் 9965 பேர் லிகிதசேவைக்கு எடுபட்டனர். சிங்கள மாணவர் 93 6 சதவீதம். 492 பேரே தமிழ்மாணவர். 4.9 சதவீதம்.

தமிழ் என்றால் தலைகுனிய வைக்கும் நிலைபருப்போல தொடங்கி இன்று பாரவினையாய்விட்டது.

இந்த வரலாற்றில் அரசியல் கருத்துக்கள் இடம்பெறவில்லை தமிழ்மக்கள் உரிமைபற்றி சுமார் 30 வருடங்களாகப் பேசிப்பேசி பேச்சின் ஏமாற்றம் போருக்கு வழிவகுத்தது.

இருப்பினும் இன்றைய பிரச்னை 'பயங்கரவாதம்' அல்ல. இந்தப் பயங்கரவாதத்தை வளர்த்துவந்தஅரசியல் கபடம் என்பது தெட்டத்தெளிவாகிறது.

கபடத்தின் முகமூடிகிழித்தெறியப்பட்டது. உலக சமுதாயத்துக்கு அம்பலப்படுத்தப்பட்ட இன்றைய தமிழரின் பரிதாபநிலை, நாட்டின் ஏனைய பகுதிகளைப் பாதிக்கமாட்டாதென்று இன்று எவரும் சொல்லத் துணியார்.

முற்றான அழிவைத்தடுக்க இருபகுதியினரும் நியாயமான சுமுகமான முடிவுக்கு ஒரு ஆரம்பம் காண வேண்டும்.

### "அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில்

# தமிழ்ப்போராளிகள் உட்பட்ட அமைப்பே கலந்துகொள்ளும்"

## பத்திரிகையாளர் மத்தியில் 'அமிர்'

(சென்னை)

''இலங்கை அரசுடன் தமிழர் பிரச்னை குறித்து இனிமேல் பேச்சுவார்த்தை இடம் பெறுமானால், தமிழ்மக்கள் சார்பில் தமிழ்ப்போராளிகள் உட்பட ஒன்றுபட்ட ஐக்கிய அமைப்பு ஒன்றே கலந்துகொள்ளும். இதனை இந்திய அரசு, இலங்கை அரசிடம் வலியுறுத்தவேண்டும்.''

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் திரு. அமிர்தலிங்கம் மேற்குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்திச் சொன்னார்.

இலங்கை இனப் பிரச்னை குறித்து, அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையே உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தும் வாய்ப்பு இப்பொழுது இருப்பதாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்ட திரு. அமிர்தலிங்கம், இனப்பிரச்னைக்கு சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றைக் காண்பதற்கு, அரசிடமோ- அரசியல் கட்சிகளிடமோ- சிங்கள மக்களிடமோ மனமாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தோன்றவில்லை என்று கவலை தெரிவித்தார்.

அண்மைக் காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து தமதுமக்களின் நெருக்குதலினாலேயே, ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்தியப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ளதாக அமிர்தலிங்கம் சொன்னார்,

புதுடில்லியில் நடைபெறும் உச்சி மாநாட்டில் சில ஆக்கபூர்வமான- உறுதியான யோசனைகளை இலங்கை அரசு, இந்திய அரசிடம் தெரிவிக்க வேண்டும். அவ்விதம் தெரிவிக்கப்படும் யோசனைகளைப் பரிசீலனை செய்த பின்னரே இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி ஆராயும் என்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் ஒரு கால எல்லையை அரசு நிர்ணயிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை இனப்பிரச்னைக்கு அயராது பாடுபட்டுவரும் இந்திய அரசுக்குத் தமது நிலையைத் தெளிவுபடுத்திவிட்டதாகத்தெரிவித்த திரு. அமிர்தலிங்கம் தமிழர் கூட்டணியின் நிலை குறித்து இந்திய அரசு அளிக்கும் மதிப்புக்கு பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து இராணுவத்தையும், பொலிஸ் அதிரடிப்படை பிரிவையும் வெளியேற்றவேண்டும் என்றும் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் பலவித கஷ்டங்களை ஏற்படுத்திவரும் கட்டுப்பாடுகளை உடன் நீக்கி சிவில் நிர்வாகம் நடைபெற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், இனப்பிரச்னைக்கு இராணுவத் தீர்வு இலகுவான வழி அல்ல என்பதை அரசாங்கமும், ஜனாதிபதியும் உணர்ந்திருக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(இ- மா)

### ✶ இன்று திருஞானசம்பந்தர் குருபூசை

# சைவநெறி தழைத்தோங்கத் தண்டமிழிற்பாடல் செய்தார்

அ.சபாபதிப்பிள்ளை

சைவ நெறி தழைத்தோங்க சீகாழியில் அவதரித்து மூன்று வயதிலே ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தப் பெருமான் தேமதுரத் தேவாரங்கள்பாடி புறசமய இருளைப் போக்கிக் கொண்டு இருந்தார். நாவுக்கரசருடன் வேதாரண்யத்திற்கு வருகை தந்த பொழுது சம்பந்தப் பெருமானை பாண்டிமாதேவியும் குலச்சிறையாரும் அழைத்து பாண்டி நாட்டில் சைவத்துறை விளங்கச் செய்ய வேண்டினார்கள். சமணர்சுளினால் பல கஷ்டங்களை அனுபவித்த நாவுக்கரசர் தடுக்கவும் கேளாது ''கோளறு திருப்பதிகத்தை''பாடி நாவுக்கரசருக்கு சமாதானம் கூறி மதுரைவந்து சேர்ந்தார்.

சம்பந்தர் திருஆலவாய்ப் பெருமானை வணங்கி ஓர்மடத்தில் பரிவ ரங்களுடன் தங்கினார் கொலைக்கு அஞ்சா சமணர்கள் இது நல்ல தருணம் என்றுஎண்ணி பாண்டி அரசனின் உதவியுடன் இரவோடிரவாக தீப்பந்தங்கள் கொளுத்தி மடத்திற்குத் தீ மூட்டினார்கள். சம்பந்தப் பெருமான் அமணர் கொளுவும் சுடர் பாண்டிறற்காகவே என்று திருப்பதிகம் பாடினார்.

''செய்யனே திரு ஆலவாய் மேவிய
ஐயனே அஞ்சலென்றருள் செய்யெனைப்
பொய்யராம் அமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பண்டியற்காகவே''

எய்தவனாகிய பாண்டியனை வெப்புநோய் அடர்ந்தது. பெரிதும் துன்புற்றான் சமணர்கள் ஒன்று சேர்ந்து மருந்து மந்திரம் எல்லாம் செய்தார்கள், வருத்தம் பன்மடங்கு கூடிற்று. மங்கையர்க்கரசியா வேண்டுகோள்ப்படி பாண்டியனுடைய நோய் தீர்கக அரண்மனை வருகிறார். அல்லலே கொடுக்கும் அமணத் தலைவர்கள் பெரும் கூட்டமாக நிற்கிறார்கள். பச்சிளங் குழந்தையாகிய ஞானசம்பந்தர் எங்ஙனம்இந்தக் கொலைப் பாதகர்களை சமாளிப்பார் என்று ஏங்கிப் பரிவுடன் பார்க்கிறார் பாண்டிமாதேவி. ஆலவாய் அப்பன் துணைநிற்க இந்த மந்திக் கூட்டத்திற்கு எளியேன் அல்லேன் என்று பகர்கிறார்.

''சந்துசேனனும் இந்து
சேனனும் தருமசேனனும்
கருமைசேர்
கந்துசேனனும் கனகசேன
னுமிதலாகிய பெசர்
கொளா
மந்திபோல் திரிந்தாரியத்
தொடு செந்தமிழ்ப்பயன்
அகிறிலர்
அந்தகர்க் கெளியேனலேன்
திருஆலவாய் அரண்
நிற்கவே''

பின் ''மந்திரமாவது நீறு'' என்று தொடங்கும் திருநீற்றுப் பதிகம்பாடி பாண்டியனு

(5-ம் பக்கம் பார்க்க)

## றமழான் சிந்தனை

நீங்கள் மனிதர்களுக்கு அஞ்சாதீர்கள். எனக்கே பயப்படுங்கள் என வசனங்களை ஒரு சொற்ப கிரமத்துக்கு விற்றுவிடாதீர்கள். எவர்கள் அல்லாஹ் இயக்கி வைத்த (வேதத்) தைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையா. அவர்கள் நிச்சயமாக நிராகரிக்கும். (காபிர்களே) ஆவர்.

(திருக்குர்ஆன் 5:44)

நோன்பு துறக்கும் நேரம்
(மஃரிப் )6;22
நோன்பு ஆரம்பிக்கும் நேரம்
[ஸஹர் முடிவு) 4:18
தாராபுரம் கஸ்மில்.

## மக்கள் கருத்து

### சட்டவிரோத மின்பாவனை

வடபகுதியில் இன்று மனித உயிர்கள் பெறுமதியற்றுப் போயிருக்கும் வேளையில் நம்மில்பலர் உயிராபத்துக்களுக்கு மிக உடந்தையாகவுமிருக்கின்றனர்.

இதுவிடயத்தில் சட்டவிரோத மின்பாவனை மிகவும் கவலைக் குரியதாகும்

எம்மில்பலர் எரிபொருள் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்கு சட்ட விரோத மின் சாரத்தைப் பெறும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர் இந்த ஆபத்தான நடவடிக்கை அண்மைக்காலங்களில் மிகவும் பொறுப்பற்ற விதத்தில் இடம் பெற்று வருகின்றது.

மெல்லிய கம்பிகள், வேலி முட்கம்பிகள் மூலமாக மின் சாரத்தை எடுத்துப் பாவிக்கும் வேளைகளில் எத்தனையோ உயிரிழப்புக்கள் நேர்ந்துள்ளன தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன.

கனகம்புளியடி உபதபாலதிபர் கு. மகாதேவா கடந்த கடந்த 21 - 5 - 85 - ல் அநியாயமாக உயிரிழந்ததும் இத்தகைய சட்டவிரோத நடவடிக்கையினாலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இத்தகைய இழப்புக்களையும் ஆபத்துக்களையும் கருத்தில் கொண்டு சட்டவிரோத மின்பாவனையை அடியோடு கைவிட்டு நம்மை நாம் காப்பாற்றிக் கொள்வோம்.

சி. சந்திரமோகன்
சாவகச்சேரி.

# 15-வது தொடர் இலக்க உணவுமுத்திரை விநியோகம்

(சுண்டுக்குளி)

யாழ். உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினர் 15 வது தொடர் இலக்க உணவு முத்திரைகளை யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

தற்பொழுது நடைமுறையிலிருக்கும் 14-வது தொடர் இலக்க உணவு முத்திரைகள் மே மாதத்துடன் முடிவடைவதால் புதிய உணவு முத்திரைகள் ஜூன் மாதத்திலிருந்து அமுலுக்கு வரவுள்ளது. இம் முத்திரைகள் முன்னர் பாவனையில் வைத்திருந்த 300 ரூபாவுக்கு குறைந்த வருமானமுடையவர்களுக்கே மீண்டும் வழங்கப்படும்.

## பங்களாதேஷில் நோய் அபாயம்

(புதுடில்லி)

பங்களா தேஷில் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அசுத்தங்கள் நிலவியதினால் 46 பேர் இறந்துள்ளனர். இவர்கள் வாந்திபேதி நோய்க்கு இலக்காகி இறந்திருக்கக்கூடும் என டாக்காவில் உள்ள அதிகாரிகள் கருதுகின்றார்கள். அத்துடன் அப்பிராந்தியத்தில் வாந்திபேதி பெருமளவில் பரவும் அபாயம் தோன்றியுள்ளது. பெரும்பாலோருக்கு வயிற்றோட்ட நோயும் ஏற்பட்டுள்ளது.

## யாழ். கிளிநொச்சி பாவனையாளர்கள் சங்கங்கள் கலைப்பு

(சுண்டுக்குளி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டுமன்றி யாழ் மாவட்டத்திலுமுள்ள சகல பாவனையாளர் சங்கங்களும் கலைக்கப்பட்டுள்ளன.

சங்கங்களின் புனரமைப்புச் சம்பந்தமான வேலைகள் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்றும் அங்கத்தவர்களைச் சேர்க்கும் பணியில் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான உள்நாட்டு வியாபாரப் பரிசோதகர், கிராமசேவையாளர், விசேடசேவை அலுவலர் ஆகியோருடன் கலைக்கப்பட்ட பாவனையாளர் சங்கத்தலைவர், செயலாளர், பொருளாளர், ஆகியோரும் ஈடுபடுகின்றனர் என்றும் அங்கத்தவராகச்சேர விரும்புவோர் 1985-ம் ஆண்டு யூன்மாதம் 15ம் திகதிக்கு முன்னதாக வருடாந்தச் சாந்தாவாக ரூபா 5/- செலுத்தி அங்கத்தவராகச் சேர்ந்துகொள்ள வேண்டும் என்றும் யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு. த. மார்க்கண்டு தெரிவித்துள்ளார்.

## எழுத்தாளரின் தாயார் காலமானார்

(யாழ்ப்பாணம்)

பிரபல எழுத்தாளர் அ. செ முருகானந்தத்தின் தாயார் செல்லக்கண்ணு தமது 85-வது வயதில் நேற்றுமுன்தினம் அளவெட்டியில் காலமானார்.

## கிளிநொச்சியிலும் பஸ்சேவை பாதிப்பு

(கிளிநொச்சி)

டீசல் தட்டுப்பாட்டை அடுத்து கிளிநொச்சி இ.போ.ச. டிப்போ பஸ்சேவை கடந்த சில தினங்களாகப் பாதிப்படைந்துள்ளது. போக்குவரத்துச் சீர்குலைவு காரணமாக யாழ்ப்பாணம் போன்ற தூர இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகள் பெரும் கஷ்டம் அடைந்தனர்.

உள்ளூர் பஸ் சேவைகள் திருப்திகரமாக நடைபெற்றது டிப்போ அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையின் பலனாக டீசலைத் தருவித்து பஸ் சேவையை நல்லமுறையில் நடத்த தற்போது ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவந்தது.

## மிகப் பெரிய முட்டைப் பொரியல்

(பாரிஸ்)

உலகில் மிகப்பெரிய முட்டைப் பொரியல் ஒன்று பிரான்ஸில் தயாரிக்கப்பட்டுள்ளது.

42 470 முட்டைகள், 8 கிலோகிறும்பட்டர், 18 கிலோகிறும் உப்பு, 80 லீற்றர் எண்ணெய், 20 லீற்றர் ஐஸ்கிறீம் ஆகியவை சேர்த்து இந்த முட்டைப் பொரியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு மணித்தியாலயத்தில் இந்தப் பொரியல் தயாரிக்கப்பட்டது. இதனை 10,000 மக்கள் பங்கிட்டு உண்டனர் இந்தமுட்டைப் பொரியல் தயாரிக்கப்பட்டது 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெற்றது.

முன்னர் 35,000முட்டைகளைக் கொண்ட முட்டைப் பொரியல். ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் நல்லூர் பண்டாரக்குள மருதவளவு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூஜை விழா மிக அமைதியாக கொண்டாடவுள்ளனர். மன்ற மாணவர்களின் 'சிவஞான பாலுண்ட திருஞானசம்பந்தன்' நாட்டிய நாடகம் இடம்பெறும். அதனை தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு மாணவி செல்வி தமிழ்ச்செல்வி இரகுநாதனின் திருமுறை இசை அரங்கும் சொற்பொழிவும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சுவாமிகளுக்கு விசேட பூஜையும் இடம்பெறும்.

# அரச ஊழியர் மட்டக்களப்பு செல்ல நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்டு தமது பிறந்த இடத்தைநாடி வந்திருக்கும் அரச-கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களை மீண்டும் கடமைக்கு அழைத்துச் செல்லும் நடவடிக்கையில் பொத்துவில் முதலாவது எம். பி ஜனாப் உதுமான்லெப்பை ஈடுபட்டுள்ளார்.

தொழிற்சங்கப் பிரமுகரும், தபால் அதிபருமான திரு. இ. திருநாவுக்கரசு, பாதிக்கப்பட்டு யாழ். மாவட்டம் சென்ற உத்தியோகத்தர்களை மீண்டும் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களுக்கு அழைப்பது சம்பந்தமாக ஜனாப் உதுமான்லெப்பையுடன் தொடர்புகொண்டதன் பேரில் அவர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுசம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்துடனும் அவர்கள் தொடர்புகொண்டு பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை கோரியதுடன் கடமைக்குச் செல்வதற்கான வசதிகளை செய்துகொடுக்கும் பட்சத்தில் பாதுகாப்புடன் மட்டக்களப்பிலிருந்து பஸ்களை அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (மா)

## இன்றைய பலன்

வைகாசி; 22 (1985 6-4)
செவ்வாய்க்கிழமை
திதி: பிரதமை காலை 7-53ன் மேல் துதியை
நக்ஷத்திரம்: மூலம் பின் இரவுவரை.

மேடம்: பிள்ளைப்பாசம் உள்ளத்தில் தலைதூக்கும். சமயோசித நடவடிக்கையின்மூலம் எதையும் வெற்றிகாண முடியும்.

இடபம்: கருடப் பார்வை உங்களை வட்டமிடலாம். முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள். சிலருக்கு அன்னியவாசமுண்டு.

மிதுனம்: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும் இல்லம் பல்கலைக் கழகமாக மாறும். களஸ்திர வழியாலும் கண்ணியம்சேரும்.

கடகம்: வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடும். அவசரப்போக்கினால் ஆபத்துக்கள் விளையும். சகோதர வழியாலும் சஞ்சலமுண்டு.

சிங்கம்: ஒளிமயமான தினம். ஆலயவழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். உங்கள் உற்சாகத்தில் பெற்றோரும் துணை நிற்பர்.

கன்னி: செய்தொழிலால் சிறப்படைவதற்கு இடம் உண்டு. வித்தையில் வெற்றி நேரும். வேண்டியது கிடைக்கும் பொதுமக்கள் தொடர்புடன் புகழ் வந்துசேரும்.

துலாம்: மெத்தவும்பொருள் வந்துசேரும். மேலிடத்துஆதரவும் தப்பாமல் கிட்டும். தித்திக்கும் செய்தியுடன் தேனான வாழ்வுமுண்டு.

விருச்சிகம்: எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்து உந்தும். ஏமாற்றம் தாக்கும். விந்தையான போக்கு வேடிக்கை காட்டும்.

தனுசு: அவசரபுத்தியினால் விபரீதங்கள் விளையலாம். கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும். உடல்நலத்தையும் பேணவும்.

மகரம்: பேச்சு வன்மையினால் புகழ்சேரும். பெரியோர்களும் ஆசி கூறுவர். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு உண்டு.

கும்பம்: துஷ்டர்கள் உறவு உங்களைச் சங்கடத்தில் மாட்டிவைக்கும் பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. இன்று உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

மீனம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும். சிலருக்கு டதியவாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம். அன்னை வழிச்சுகமும் உண்டு.

திருமலை வே. ரவீந்திரன்



**வின்ஸர்**
தினசரி 10-30, 2-00, 4-15
RISKY BUSINESS
மர்மம், திகில்,
விறுவிறுப்பு, ஆவேசம்
கலந்த ஓவியம்

**ராஜா** தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2 30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
**சலங்கை ஒலி**
கடைசிவாரம்

**லதா மினி**
(கோண்டாவில்)
ராஜேஷ்-சுபத்ரா-
ரஜனிகாந்த்
**'சித்திரமே சித்திரமே'**
10-30, 2-00, 4-00

**யாழ். வின்ஸர் மினி**
தினசரி 10-30, 2-30
விஜயகாந், ஜோதி,
வனிதா, கவுண்டாமணி,
சத்தியராஜ் நடித்த
**ராமன் ஸ்ரீராமன்**
இறுதிவரை மர்மம்,
திகில் நிறைந்த
வ ண ஓவியம்.
புதிய வெளியீடு

**நியூசாந்தி(மினி)**
யாழ். சாந்தி சினிமா
திரையில்)
மோகன்-ஊர்வசி.
மகேந்திரன்
**"பிள்ளை நிலா"**
புதிய வெளியீடு
தமிழ் நாட்டில் வெள்ளி
விழாவை நோக்கி ஓடிக்
கொண்டிருக்கிறது.
காட்சி: 10-30 — 2-30

S, T. L. **மினிசினிமா**
(திருநெல்வேலி)
காட்சி: 10-30, பி.ப.2-15,
4-30
**TERROR**
இதுவரை யாழ் நகரில்
திரையிடப்பட்ட அனைத்துப்
படங்களைக்காட்டிலும் முற்
றிலும் பாலியல் காட்சிகள்
நிறைந்தபடம் எக்காரணம்
கொண்டும் 18 வயதுக்குட்
பட்டோர் அனுமதிக்கப்பட
மாட்டார்கள்.

**ஸ்ரான்லி மினி**
5'X5' திரையில்
மோகன். ரேவதி,
கவுண்டமணி நடித்த
**"உதய கீதம்"**
10-30 மட்டும்
**"DIVINE EMMANUEL"**
(வயது வந்தவர்களுக்கு
மட்டும்)
முகல்தரமான பிரதி
2-30, 4-30 மட்டும்

**வீடியோ சினிமா**
சுதாகர் - ராதிகா
நடித்த
**ஆயிரம் வாசல்
இதயம்**
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

**வெலிங்டன்**
(யாழ்: நகர்)
10-30, 2.30
பாக்கியராஜ் - சரிதா
நடித்த
**மௌன கீதங்கள்**
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி


# கிளிநொச்சி அபிவிருத்தி கருதி கச்சேரி உபகரணங்களை ஒப்படைக்கக் கோரிக்கை

(கிளிநொச்சி)

மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள கிளிநொச்சி மாவட்ட முன்னேற்றம் கருதி கிளிநொச்சி கச்சேரியில் இருந்து கொள்ளையடித்துச் செல்லப்பட்ட தட்டச்சு இயந்திரங்கள், மற்றும் அலுவலக உபகரணங்களையும் திருப்பித் தந்துதவுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு மிகவும் பணிவானதும் உருக்கமானதுமான வேண்டுகோள் ஒன்றை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான ஏ. சண்முகராசாவும் மாவட்ட உதவி அரசாங்க அதிபர்களும் கச்சேரி ஊழியர்களும் விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: "கிளிநொச்சி மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பது யாவரும் அறிந்ததே. இத்துர்ப்பாக்கிய நிலையை அகற்றி மக்களின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்திசெய்வதே இம்மாவட்டத்தை அமைத்ததன் குறிக்கோளாகும்.

இந்த அடிப்படையில் இம் மாவட்டத்தில் ஒரு புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவை அமைக்கத் துரித நடவடிக்கை எடுக்கப்படுகிறது

அத்துடன் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்கவும் கிளிநொச்சி கச்சேரி மூலம் அடையாள அட்டைகளை வழங்கவும் சிறுகைத்தொழில் புடவைத்தொழில் திணைக்களங்களின் சேவைகளை விரிவாக்கவும் கிளைகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

தந்தி தொலைபேசிச் சேவைகள் சீர்குலைந்து கடிதச் சேவைகளும் தாமதமாகச் செயல்படும் இந்நேரத்தில் கிளிநொச்சி கச்சேரியில்உள்ள தட்டச்சு இயந்திரங்கள், அலுவலக உபகரணங்கள் உபகிதாதிகள் போன்றவற்றையும் இழப்பது கச்சேரி வேலைகள் பூரணமாக ஸ்தம்பிக்கும் நிலைக்கு இட்டுச்செல்வதாகும்.

இம்மாவட்ட மக்களின் உடன் தேவைகளைக்கூடக் கவனிக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதால் ஏற்கனவே துன்பத்திலும் இன்னல்களிலும் துயருறும் இம்மாவட்ட மக்களின்மேல் கருணைகூர்ந்து இப்பொருட்களை தயவுசெய்து திருப்பித்தருமாறு சம்பந்தப்பட்டவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்."

யாழ். இந்து

## ஆரம்ப பாடசாலை அதிபர் ஓய்வு பெறுகிறார்

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திரு. செ. கனகரத்தினம், இம்மாதம் பதினைந்தாம் திகதி முதல் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார்

அதிபர் செ. கனகரத்தினத்தின் சிறப்பான சேவையைப் பாராட்டி அவரைக் கௌரவிக்கும் முகமாக யாழ். இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் தனியாகவும், பெற்றோர் மாணவர்கள் தனியாகவும் பாராட்டு விழா நடத்துகின்றனர். தம்முடன் ஒத்துழைத்து பாடசாலை முன்னேற்றத்தில் கூடுதல் அக்கறை கொண்ட ஆசிரியர்களையும், பிரமுகர்களையும், நண்பர்களையும் கௌரவித்து அதிபர் இம்மாதம் எட்டாம் திகதி பாடசாலை மண்டபத்தில் மதியபோசன விருந்தளிக்கின்றார்.


**மொடேர்ண்
மினி சினிமா**
[ஸ்ரீலங்கா அச்சக லேன்
ராஜா தியேட்டருக்கு
அருகாமை]
ஆங்கிலப் பட ரசிகர்களின்
அமோக ஆதரவைப்பெற்ற
கிளினஸ் ஸ்ருட்டின்
திறமையான நடிப்பில்
உருவான
**HELLEYS HEROES**
(ஹெலிஸ் ஹீரோஸ்)
தினசரி 3 காட்சிகள்

**சிவன் மினி சினிமா**
K. K. S. றோட் சிவன்
கோயிலடி சந்திக்கு
முன்பாக
10-30, 2-30
3 முதல் 4 வரை
ரஜனிகாந் - ஸ்ரீதேவி
ஜெய்சங்கர் - ஸ்ரீபிரியா
நடித்த
**தனிக்காட்டு ராஜா**
கலர்)
4 அடித் திரையில் காண்பிக்கப்படுகிறது.

**ஆனந்தி
வீடியோ சினிமா**
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
எம்.ஜி.ஆர் -சரோஜாதேவி
நடித்த
**நான் ஆணையிட்டால்**

**ஹரன் சினிமா**
தினசரி 10-30 - 6 30
250 நாட்களுக்குமேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
**விதி**
(கலர்


## அமரர் வே. க. இராசலிங்கம்

"என்னுடைய கான்றையிட்டிங் மாதிரி நீங்கள் எழுதுவியளே" என்று குழந்தையுள்ளத்துடன் கேட்கும் அந்தப்பெரியவர் மறைந்து ஒரு மாதமாகிவிட்டது.

அவரது கையெழுத்து மட்டுமல்ல, தலையெழுத்தும் மிக நன்றாகவே இருந்தது

மங்காப் புகழ்பெற்ற கனகலிங்கம் சுருட்டுத்தொழிலதிபராகத் திகழ்ந்த அமரர் திரு. வே. க. இராசலிங்கம் கொழும்பு 'ஒப்பததா அன் கொம்பனி', 'யானை பீடிக் கொம்பனி' ஆகியவைகளின் பங்காளராகவும் விளங்கியவர்.

தந்தையார் கனகலிங்கம் காலத்தைவிட இவர் காலத்தில் கனகலிங்கம் சுருட்டின் தரமும் புகழும் மேலும் ஒரு படி வளர்ந்தது என்றால் அதற்கு இவரது கடும் உழைப்புத்தான் காரணம் எனலாம்.

"தொழிலாளர்களின் வியர்வை காயமுன்னர் அவர்களின் கூலியை கொடுத்துவிட வேண்டும்" நபிகள் நாயகத்தின் இந்த மொழியை நடைமுறைப்படுத்தியவர் அவர்,

முதலாளியாக இருந்த காலத்திலும் சரி, தொழில்களை எல்லாம் மக்களுக்கு கையளித்து விட்டு 'சிவனே' என்று ஒய்வெடுத்துக் கொண்டிருந்த காலத்திலும் சரி, அவர் எப்பொதுமே எளிமையாகத்தான் வாழ்ந்தார்.

எழுபத்தி நாலு வயதுவரை வாழ்ந்துவிட்ட போதிலும் அவரை அறிந்தவாகள்- அவரது இனிய இயல்பை உணர்ந்தவர்கள் 'அவர் இன்னும் வாழ்ந்திருக்கலாம்' என்று தால சொல்லுவார்கள்

அத்தகைய ஒரு பெருமகன் தான் திரு வே. க. இராசலிங்கம்

பொ. சண்முகநாதன்.

## சைவநெறி

[3ம் பக்கத் தொடர்ச்சி]

டைய வெப்பு நோயுடன் கூனையும் குணப்படுத்தினார். மேன்மைகொள் சைவநீதியும் தெய்வவெண் திருநீறும் மீண்டு உலகெலாம் விளங்கிற்று

"ஆழ்க தீயதெல்லாம்
அரணநாமமே
சூழ்க வையகமுந் துயர்
தீர்கவே"!!

## அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

சாந்தையைச் சேர்ந்த சபாபதி திருஞானசம்பந்தமூர்த்தி என்பவருக்கு யாழ்ப்பாணம் "அரஸ்கோ இன்டஸ்ரீஸ்" நிறுவனத்தின் அதிபர் அமரர் அரசரத்தினம் ஞாபகார்த்தமாக மூன்றுசக்கர சைக்கிள் வண்டியொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. சாந்தை சித்திவிநாயகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் வைத்து அண்மையில் இந்த முச்சக்கர சைக்கிள் வண்டி அன்பளிப்பு செய்யப்பட்டது.


**பேர்லின் பிரயாணம்**
JUNE 10,13,17,20-ந் திகதிகளில்
பிரயாணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
நிச்சயமான திகதி மாற்றமில்லாத பிரயாணம்
யாழ்—கொழும்பு—கட்டுநாயக்கா
[வரை எமது பிரதிநிதி உங்களுடன்
★ கொழும்பில் தங்குமிட வசதி
★ பிரயாண காசோலை
★ பாஸ்போட்
★ பொண்ட் ★ விசா
அனைத்துக்கும்
**லிப்ரஸ் லிமிட்டெட்,**
R. G பில்டிங்,
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
COLOMBO:
LIBRAS LTD
PAUL VI CENTRE
24, FRONT STREET, COLOMBO. 1


## அரசாங்க அறிவித்தல்

### சுகாதார திணைக்களம் யாழ்ப்பாணம்.

1-7-85 தொடக்கம் 31-12-85 வரைக்கும் யாழ்ப்பாணப் பெரும்பாகத்தில் உள்ள வைத்திய நிறுவனங்களுக்கு கிளிநொச்சி புகையிரத நிலையத்திலிருந்து பொதிகளை எடுத்துச் செல்வதற்கான உள்ளூர் கேள்விகள் 18-6-85க்கு முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இச்சேவைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விகிதங்களை புகையிரத நிலையத்திலிருந்து ஒவ்வோர் நிறுவனத்துக்கும் கீழ்க்காணும் நிறைத்தொகுதிகளில் கூறவேண்டும்:-

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (அ) | 1. | 15 கிலோ கிறும் வரை. | | | | |
| | 2. | 15 | கிலோவிற்கு மேல் | 25 | கிலோ | வரை. |
| | 3. | 25 | ,, ,, | 35 | ,, | ,, |
| | 4. | 35 | ,, ,, | 50 | ,, | ,, |
| | 5. | 50 | ,, ,, | 75 | ,, | ,, |
| | 6. | 75 | ,, ,, | 100 | ,, | ,, |
| | 7. | 100 | ,, ,, | 125 | ,, | ,, |
| | 8. | 125 | ,, ,, | 150 | ,, | ,, |
| | 9. | 150 | ,, ,, | 175 | ,, | ,, |
| | 10. | 175 | ,, ,, | 200 | ,, | ,, |

மேலே குறிப்பிட்ட 10 நிறைத் தொகுதிகளுக்கும் முழுத் தூரத்துக்கும் எடுத்துச் செல்வதற்கான விகிதத்தைக் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) 200 கிலோவிற்கு கூடுதலான நிறையை ஏற்றிச்செல்வதற்கு கீழ்க்காணும் 4 பிரிவுகளில் ஒவ்வொன்றின் கீழ் முழுத்தூரததுக்கும் ஒவ்வொர் 50 கிலோவிற்கான விகிதங்கள் குறிப்பிடப்படல்வேண்டும்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 200 | கிலோவிற்கு மேல் | 500 | கிலோ | வரை |
| 2. | 500 | ,, ,, | 750 | ,, | ,, |
| 3. | 750 | ,, ,, | 1000 | ,, | ,, |
| 4. | 1000 கிலோவிற்கு மேல். | | | | |

நிறுவனங்களின் பெயர்களும். அவற்றிற்கும் புகையிரத நிலயத்திற்கும் இடையிலான தூரமும், சென்ற தடவை இந்நிறுவனங்களுக்குக் கிடைக்கப்பெற்ற பொதிகளின் நிறைகளும் இப்பணிமனையில் பார்வைக்கு வைக்கப்படும்.

க. மாணிக்கம்,
சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

3590

## மன்னார் அரச அதிபர்

(மன்னார்)

மன்னார் அரசாங்க அதிபராக, ஜனாப் காதர் நியமிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது இவர் முன்பு கல்லூரி அதிபராக கடமையாற்றியவராவர். (க)

## பதில் அரசாங்க அதிபர்

[கிளிநொச்சி நிருபர்]

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபராக மேலதிக அரசாங்க அதிபர் திரு ஏ. சண்முகராசா நியமிக்கப்பட்டுள்ளார்

கிளிநொச்சி அரசாங்க அதிபராக இதுவரை பணிபுரிந்து வந்த திரு எஸ். தெய்வநாயகன் ஆறு மாத லீவில் இந்தியா சென்றுவிட்டதைத் தொடர்ந்தே திரு. சண்முகராசா பதில் அரசாங்க அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

## மஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் மஞ்சத் திருவிழா நாளை 5ம் தேதி புதன் கிழமை மாலை நடைபெறும். (க)

## சம்பந்தர் குருபூசை

(வண்ணார்பண்ணை)

இன்று செவ்வாய்க்கிழமை திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவிருக்கிறது காலை எட்டுமணிக்கு ஆரம்பமாகும். இக் குருபூசை நிகழ்ச்சிகள் மாலை 4 மணிக்கு சுவாமி வீதி வலம் வரும் நிகழ்ச்சியுடன் நிறைவு பெறும்.

## வட்டு. ஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் ஞானசம்பந்தர் விழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தர் வித்தியாலயத்தில் இன்று ஞானசம்பந்தர் விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சிறப்புவிருந்தினராக சங்கானை உதவி அரசாங்க அதிபர் ஏ. வைத்திலிங்கம் கலந்து கொள்வார்.

சிறப்புவிருந்தினராக சைவப் பெரியார் சி. மருதப்பிள்ளை கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துவார் விழா இறுதியில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் இடம் பெறும்.

### ரான்ஸ்மீட்டர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டடத்தில் இயங்கும் தொலைபேசி ரான்ஸ்மீட்டர், சில தினங்களுக்குமுன் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

## இறந்தவர் குடும்பத்துக்கு நிதிஉதவி

(புலோலி)

துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமான வல்வெட்டித்துறை மக்கள்வங்கி ஊழியர் சோ ஜெயச்சந்திரனின் குடும்பத்திற்கு வட பிராந்திய மக்கள்வங்கி ஊழியர்களிடமிருந்து சேகரித்த 25,000 ரூபா பணத்தை வல்வெட்டித்துறை மக்கள்வங்கி ஊழியர் நலன்புரிச் சங்கம் அடுத்த மாதம் 2-ம் திகதி கையளிக்கவுள்ளதென்று வல்வெட்டித்துறை மக்கள்வங்கி ஊழியர் நலன் புரிச்சங்கத்தலைவரும், வங்கி முகாமையாளருமான திரு எஸ். சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

### ஜே. ஆருக்கு....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படுவதாகவும், இவ் உதவிகள் பற்றி மீளாய்வு செய்ய நேரும் என்றும் தெரிவித்துள்ளார்.

### ஜெர்மனியில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டாம் என்றும் அப்படி விஜயம் செய்யு, பட்சத்தில், வடபகுதிக்கு, யாழ்ப்பாணத்திற்கு சென்று மனித உரிமைகள் அங்கு எப்படி மீறப்படுகிறதென்பதை நேரில் அறிந்து கொள்ளுமாறும் அத்துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது. (க)

### திருமலை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்கே. வல்லிபுரநாதன், எஸ் சுப்பிரமணியம் இவர் திருமலை தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் பணிபுரிந்தவர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். திருமதி பரமேஸ்வரி சிவானந்தன், அவரது தாயார் ஐயமுத்து, இவர்கள் திருகோணமலை சமாதி ஒழுங்கையைச் சேர்ந்தவர்கள்.

திருக்கோணமலை ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் விபரம் வருமாறு:

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி ராஜேஸ்வரி, பஸ் நடத்துனர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முருகேசு, பன்குளத்தைச் சேர்ந்த வேலும்மயிலும், சீனக்குடாவைச் சேர்ந்த ராஜாமணி, பன்குளத்தைச் சேர்ந்த வி. செல்வராஜா, வி. ஆனந்தராஜா, ஏ. செல்வநாயகி, வை. ராஜேஸ்வரி இவரது 3 மாத ஆண்குழந்தை.

இதைச் செய்தவர்கள் காவலாளியை எச்சரித்துவிட்டு இக்கொள்ளையை நடத்தியதாக கூறப்படுகிறது (க)

# இலங்கை தமிழ் அகதிகளுக்கு புயல் தாக்காத வீடுகள்!

## மத்திய அரசு ஒரு கோடி ரூபாய் வழங்கியது

(சென்னை)

இலங்கை தமிழ் அகதிகளுக்காக மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் வீடுகள் கட்டப்படவுள்ள பகுதிகளை ஆந்திர மாநில கட்டட கலை நிபுணர்கள்குழு பார்வையிட்டதாக தமிழக மறுவாழ்வுத் துறை துணைச்செயலாளர் திரு. யூ. எஸ். நடராஜன் சென்னையில் நேற்று நிருபர்கள் மத்தியில் தெரிவித்தார்.

வீடுகள் கட்டப்படவுள்ள இந்த இடங்கள் புயல் வீசும் பகுதிகளாக உள்ளமையினால் அகதிகளுக்கு கட்டப்படும் வீடுகள் புயல்தாக்கத்துக்கு உள்ளாகாமல் இருக்கவேண்டுமென்ற யோசனைக்கிணங்கவே ஆந்திர நிபுணர்கள் இந்த இடங்களை பார்வையிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இலங்கை தமிழ் அகதிகளுக்கான வீடுகளை கட்டுவதற்கு மத்திய அரசு ஒரு கோடி ரூபாவை வழங்கியுள்ளதுடன், 500 வீடுகளுக்கான அனுமதி கிடைத்துள்ளதாகவும், மேலும் மண்டபத்தில் 2000 வீடுகளும், தூத்துக்குடியில் 1000 வீடுகளும் கட்டுவதற்கான அங்கீகாரம் கோரியுள்ளதாகவும் திரு. நடராஜன் தெரிவித்தார். (ரா)

## ஓமந்தையில் அபகரித்த 25 பீப்பா டீசலை மீளத் தருமாறு வேண்டுகோள்!

(யாழ்ப்பாணம்)

கடந்த 30ம் திகதி ஓமந்தையில் அபகரிக்கப்பட்ட 25பீப்பா டீசல் எண்ணெயை மீளத் தரும்படி வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

அவ்வேண்டுகோளில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''எவ்வளவோ பெருமுயற்சியுடன் அநுராதபுரத்திலிருந்து கொண்டுவந்த டீசலை யாரோ நடுவழியில் அபகரித்துவிட்டார்கள். அவர்கள் யாராக இருந்தாலும் வடபகுதி வாழ் மக்களின் நன்மையைக் கருதி அபகரித்துச் சென்ற அந்த 25 பீப்பா டீசலையும் மீளத் தருமாறு இருகரம் நீட்டி வேண்டிக் கொள்கிறேன்.

தயவுசெய்து பொதுமக்களின் போக்குவரத்து வசதிக்காக நாம் கொண்டுவரும் டீசலில் யாரும் கைவைக்க அனுமதிக்க வேண்டாமெனவும், அவற்றுக்கான பாதுகாப்பை வழங்கும் படியும் பொதுமக்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வடபகுதி பஸ்சேவை சீராகத் தொடரக்கூடிய சூழ்நிலை விரைவில் உதயமாகவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். அதுவரை ஏற்படும் சிரமங்களைத் தயவுசெய்து பொதுமக்கள் பொறுக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்''. (கி)

## ஆரியகுளத்தில் மீண்டும் தொலைபேசி கேபிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் சில தினங்களுக் முன் மீண்டும் 'கேபிள்' கொளளையடிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தியில் வெடியினால் தகர்க்கப்பட்ட குழியின்மூலம் கேபிள் வெட்டப்பட்டதால் சுமார் நூறு தொலைபேசிகள் செயலிழந்தன.

கடந்த வெள்ளிக்கிழமை தொலை தொடர்புப்பகுதியினர் தொலைபேசிகளை இயங்கச்செய்வதற்காகத் திருத்த வேலையில் ஈடுபட்டனர் ஆனால் அடுத்த இரு தினங்களுக்குள் மீண்டும் கேபிள் வெட்டப்பட்டுள்ளது.

கேபிள் தொடர்ந்து வெட்டப்பட்டால் தொலைபேசிச் சேவை முற்றாக ஸ்தம்பிதமடையுமென்று தொலை தொடர்புப் பகுதியினர் தெரிவித்தனர். (க)

## அடுத்த மூன்று ஆண்டுகளில் பாடசாலைகளின் தரம் மூன்றாக வகுக்கப்படும்

[உடுவில்]

அடுத்துவரும் மூன்றுஆண்டு காலங்களில் பாடசாலைகளின் தரம் மூன்றாக வகுக்கபபடவுள்ளன முதலாம் ஆண்டு முதல் 8ம் ஆண்டு வரையுள்ள ஆரம்ப பாடசாலைகள் 9ம் ஆண்டு முதல் 11ம் ஆண்டு வரையுள்ள இடைநிலைப் பாடசாலைகள் 12ம் ஆண்டு முதல் 13ம் ஆண்டு வரையுள்ள கல்லூரித் தரப் பாடசாலைகள் என மூன்று தரங்களில் பாடசாலைகள் பிரிக்கப்பட உள்ளனவாம்.

மானிப்பாய் கல்வி வட்டார அதிபர்கள் கூட்டம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றபோது இததகவல்கள் வெளியிடப்பட்டன.

கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய மானிப்பாய் வட்டாரக் கல்விஅதிகாரி திரு. தனஞ்சயன் கூறியதாவது:-

தற்போது ஒன்று முதல் ஆறும் ஆண்டுவரை வகுப்புக்களைக் கொண்டுள்ள பாடசாலைகளில் 1986ம் ஆண்டு 7&8ம் ஆண்டு வகுப்புக்கள் புகுத்தப்படும். இவ்வாறு 7ம் ஆண்டை தொடங்க உள்ள பாடசாலைகள் மூன்று அம்சங்களைக் கொண்டிருக்கவேண்டும்.

இப்பாடசாலையில் 7ம் ஆண்டை ஆரம்பிப்பதற்குக் குறைந்த பட்சம் 35 மாணவர்களைக்கொண்டிருக்க வேண்டும் என்றார்.

### ஒரு குடும்பத்தைச்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டனராம். இக் கடத்தலின்போது ஒரு அறையினுள் படுத்திருந்த சோமரத்தினவின் குடும்பத்தைச் சேர்ந்த வேறு இருவர் மட்டும் கடத்தல் காரர்களால் கொண்டு செல்லப் படவில்லையாம்

கடத்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதற்காக இப் பகுதியில் தீவிர சோதனைகள் இடம்பெற்றுவருகின்றன.

கடத்தப்பட்ட குடும்பத்தினைச் சேர்ந்த மூவர் வெசாக் பண்டிகையின் பொருட்டு வேறு இடத்திற்குச் சென்றுள்ளனராம். கடத்தப்பட்டவர்களைத் தேடிப் பிடிப்பதற்காக இப்பகுதியிலும் அடுத்துள்ள பகுதிகளிலும நேற்று தீவிர சோதனைகள் இடம்பெற்றுள்ளன.

இச் சம்பவத்தினையடுத்து இக்கிராமத்தில் வாழ்ந்துவந்த பொதுமக்கள் பெருமளவில் நேற்று திங்கள் காலை முதல் தமது இருப்பிடங்களை விட்டு வேறு பகுதிகளுக்கு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

இக் கடத்தலையடுத்து வவனியாப்பகுதி யெங்கும் பெரும் பதற்றம் நிலவிவருகிறது. (அ)

## நகரசுத்தி தொழிலாளரும் பாதிப்பு

(வவனியா)

அநுராதபுரத்தில் இடம் பெற்ற சம்பவத்தையடுத்து நகரசுத்தி தொழில்செய்த 200 பேர் நேற்று திங்கள் காலை அகதிகளாக வவனியா வந்து சேர்ந்துள்ளனர்.

இத்தொழிலாளர்கள் குருநாகல், கண்டி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தற்போது பாதுகாப்பின் பொருட்டு வவனியா வந்துள்ள இந்த அகதிகள் இங்குள்ள அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர்.

## திடீர் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி மதில்மேல் ஏறிப்பாய்ந்து ஆயுதபாணியாக உள்ளே புகுந்தவர்கள், கல்லூரியின் அலுவலகப் பகுதியை எட்டிப் பார்த்து சற்றுநேரம் அங்கிருந்தவர்களை விசாரித்து விட்டு உடனே வெளியேறிச் சென்றுவிட்டார்களாம்.

ஆயுத பாணியாகச் சென்றவர்களைக் கண்டதும் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட பதற்றநிலை, அவர்கள் வெளியேறியதின் பின்னரே நீங்கியதாம். (மா)

## மகோற்சவம்

(சுண்டுக்குளி)

ஆனைக்கோட்டை ஸ்ரீமூத்தநயினார் என வழங்கப்படும் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் மகோற்சவம் நாளை 4ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 17ம் திகதி தேர் உற்சவமும் 18ம் திகதி தீர்த்தோற்சவமும் மறுநாள் பூங்காவனமும் திருக்கல்யாணமும் நடைபெறும்.

## ஒன்பது எதிரிகளும் பிணையில் அனுமதி

(வவனியா]

இரணை இலுப்பைக்குளம் முள்ளிக்குளம் முருகேசு கொலை வழக்கின் எதிரிகளான ஒன்பது சந்தேகநபர்களையும் வவனியா மேல் நீதிமன்ற நீதிபதி திரு எஸ் ஆனந்தக்குமாரசாமி பிணையிற் செல்ல அனுமதி வழங்கியுள்ளார்.

எதிரிகளான மு. சுந்தரலிங்கம், மா. சதாசிவம், வே.இராசலிங்கம் பொ. சிவலிங்கம்வேலன், வீ. சபாரத்தினம், க இராஜேந்திரன், பெ. சிங்கம், அன்ரனி இராஜதுரை ஆகிய ஒன்பதுபேருமே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கனக மனோகரன் ஆஜரானார். அரச சட்டத்தரணி எஸ். சிறீஸ்கந்தராசா ஆஜரானார்.


## மரண அறிவித்தல்
### J. T. யேசுதாசன்

கோப்பாயைச் சேர்ந்த J. T யேசுதாசன் [இளைப்பாறிய கொழும்பு முனிசிப்பல் லிகிதர்] காலமானார். இவர் தங்கம்மாவின் அன்புக்கணவரும், கிருபைமலர், மனோன்மணி, நிர்மலாதேவி, பிரியதர்சினி ஆகியோரின் அன்புத்தந்தையாரும், A. R. யேசுதாசன், R K. யேசுதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார் அன்னாரின் பூதவுடல் 4-6-85 செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணிக்கு சேச் லேன், நுணாவில் மேற்கு இல்லத்திலிருந்து சாவகச்சேரி கிறிஸ்தவ மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் தருபவர்:
A. R. யேசுதாசன்

3623


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu PO; Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126